சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 56 /2021**

2023 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 06 ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியமாகிய இளங்கோவன் PW1 வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44 வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன்,எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | இளங்கோவன் | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெயர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

06.06.2023

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 16.06.1958 தேதியிட்ட நாராயணகுமார் பெற்ற கிரைய சாசனம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-1 ஆகும். 10.06.2013 தேதியிட்ட வேதாரண்யம் வட்டாட்சியர் நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலரிடம் சமர்ப்பித்த அறிக்கை நகல் வா.சா.ஆ-2 ஆகும். 01.10.2019 தேதியிட்ட நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலகத்தில் கொடுத்த குறிப்பாணை நகல் வா.சா.ஆ-3 ஆகும். 05.10.2020 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பை 3 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை எண்ணிக்கை -3 அசல் வா.சா.ஆ.5 ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

(பிரதிவாதிதரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)